# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை 3 (16-04-1998) வியாழக்கிழமை UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:119

பொது சன நூலகம்
16 APR 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## கடற்படைக்கு உதவ புதிய படை அணி!

கொழும்பு, ஏப். 16

கடற்படையினருக்கு உதவியாக ''சமுத்திர பாதுகாப்பு பிரிகேட்'' என்ற பெயருடன் புதிய படையணி ஒன்று உருவாக்கப்படவிருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடற்படையினருக்கு உதவியாககடற் பகுதியைப் பாதுகாத்தல், மீனவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கல் போன்ற பணிகளுக்காக 10ஆயிரம் பேரைக் கொண்டதாகஇந்தப் படையணி உருவாக்கப்படவிருக்கின்றது.

விசேட இராணுவ, கடற்படை பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்படும்.

மீனவ குடும்பங்களில் இருந்தே இந்தப் படைப் பிரிவுக்கு ஆள்கள் தெரிவு செய்யப்படுவர் என்றும்—

விரைவில் இந்தப் படையணி செயற்பட ஆரம்பிக்கும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# பொலீஸ் காவலரண் மீது மூதூரில் புலிகள் தாக்குதல்!

கொழும்பு, ஏப். 16

திருகோணமலை மூதூர் 14 ஆம் மைல் கல்லடியில் உள்ள பொலீஸ் காவலரண் மீது நேற்று முன்தினம் செவ்வாய் பிற்பகல் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் 3 பொலீஸாரும் சிறுவன் ஒருவனும் உயிரிழந்தனர்.

உயிரிழந்த பொலீஸாரில் ஒருவர் இன்ஸ்பெக்டர் எனவும் —

மற்றைய இருவரும் பொலீஸ் கான்ஸ்டபிள்கள் எனவும் —

பொலீஸாருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றபோது இடையில் சிக்கி 10 வயதுச் சிறுவன் ஒருவனும் உயிரிழந்தான் எனவும் — தெரிவிக்கப்பட்டது.

மேற்படி தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 50 க்கும் மேற்பட்ட புலிகள் கலந்து கொண்டதாகப்பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### அச்சந்திரிரானி



வந்து போறதில் மட்டும் குறைச்சல் இல்லை. காரியம் ஏதாவது நடக்க வேண்டுமே...!

## ஆரியரத்தின நாளை யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஏப். 16

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினரும், சர்வோதயம் அமைப்பின் தலைவருமான ஏ. ரி. ஆரியரத்தின நாளை யாழ்ப்பாணம் வருகின்றார்.

யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமை குறித்து விவரங்களைப் பெறுவதுடன் சர்வோதய அமைப்பு மூலம் மேற்கொள்ள உத்தேசித்துள்ள திட்டங்கள் குறித்தும் அவர் ஆராய்வார். (இ-3)

# அமெரிக்க உயர்மட்டக் குழு நாளை இலங்கை வருகிறது!

## சந்திரிகாவுக்கு கிளின்ரன் செய்தி

கொழும்பு, ஏப்ரல் 16

அமெரிக்காவின் உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் விசேட செய்தியுடன் நாளை இலங்கை வருகிறது.

இலங்கை இனப்பிரச்சினை, அரசின் தீர்வுத்திட்டம், வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் ஆகியவை தொடர்பாக இந்தக் குழுவினர் ஜனாதிபதி மற்றும் அதிகாரிகள், தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஐ.நாவுக்கான அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி பில் றிச்சேர்ட்சன், தென்-கிழக்கு ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான அமெரிக்க வெளி விவகார உதவிச் செயலர் கார்ள் பிரெடெலிக் இண்டர்பேர்த் ஆகியோர் அங்கம் வகிக்கும் இந்தக்குழு நாளை இலங்கை வந்து மறுதினம் திரும்பும் எனத் தெரிவிக்கப்பட்டது.

1972 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்காவின் உயர்மட்ட அதிகாரியாக பில் றிச்சேர்ட்சன் இலங்கை வருவது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் அனுப்பும் விசேட செய்தியை எடுத்து வரும் இவர், அச்செய்தியை ஜனாதிபதியிடம் கையளித்துக் கலந்துரையாடுவார்.

மற்றும் எதிர்க்கட்சிகள், தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோரையும் இவர்சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-10-3-8-21)

## புலிகள் மறுப்புத்தெரிவிப்பு

லண்டன், ஏப். 16

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். நகரில் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலுக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று விடுதலைப் புலிகள் லண்டனில் அறிவித்துள்ளதாக ஏ. எவ். பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலை புலிகளே மேற்கொண்டதாகப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## இரத்தம் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ். போதனா வைத்திய சாலை இரத்த வங்கியில் இரத்தத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நலன்விரும்பிகள், பொது நிறுவனங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் தாமாகவே முன்வந்து இரத்த தானம் செய்யுமாறு இரத்த

(10ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய துணைப்படைவீரர் வீட்டில் கிரனேட் வெடிப்பு!

## அவரும் குழந்தையும் பலி

தேசிய துணைப்படை வீரர் ஒருவரின் வீட்டில் இடம்பெற்ற கிரனேட் வெடிப்புச் சம்பவத்தில் அவரும் அவரது குழந்தையும் பலியானார்கள்.

இச்சம்பவம் நேற்று மாலை மட்டக்களப்பு திமிலைதீவு என்னுமிடத்தில் இடம்பெற்றது.

மேற்படி வீரரின் கிரனேட் தான் தவறுதலாக வெடித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வீரசிங்கம் செல்வராஜா (வயது-34), மகன் கஜேந்திரன் (வயது-3) ஆகியோரே மரணமானவர்கள் ஆவர்.

இவரது மனைவி கமலா (வயது-24) ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-21)

## பாவற்குளத்தில் 3 சிப்பாய்கள் காயம்

வவுனியா, ஏப். 16

வவுனியா பாவற்குளம் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் 3 படையினர் காயமடைந்தனர்.

கடை ஒன்றில் தேநீர் அருந்த வந்தவர்கள் மீதே கிரனேட் வீசப்பட்டது.

கிரனேட்டை வீசி விட்டு ஓடிய விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் துப்பாக்கிப்பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21)

## கிளிநொச்சியில் மோட்டார் தாக்குதல்

### அதிகாரி உட்பட மூவர் காயம்

கொழும்பு, ஏப். 16

கிளிநொச்சியில் பாதுகாப்பு முன்னணி நிலைகள் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் ஓர் அதிகாரியும், 2 படையினரும் காயமடைந்து பலாலி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம்—கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முள்ளியான் என்னுமிடத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை அவதானித்த படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் —

புலிகள் கைக்குண்டுகளை வீசித் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டபின் தப்பிவிட்டனர் என்றும் —பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பயணிகள் "பாஸ்" பெறுவதில் இன்று முதல் புதிய நடைமுறை

## இனி பிரிகேட்டுக்களில் பெற முடியும்

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு கப்பல் மற்றும் விமானம் மூலம் செல்லும் பயணிகள் தமது அனுமதிப்பத்திரங்களைப் (பாஸ்) பெறுவதற்கு புதிய நடைமுறை இன்று முதல் அமுலுக்கு வருகிறது.

இதுவரை காலமும் யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் மேற்கொண்டு வந்த இந்த அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை குடாநாட்டில் உள்ள ஒன்பது பிரிகேட்டுகளுக்கும் பரவலாக்கப்படுகின்றது.

பயணிகள் தமக்கு தேவையான பத்திரங்களை தமக்கு அருகில் உள்ள பிரிகேட் அலுவலகத்தில் பெற்று நிரப்பி அதேஅலுவலகத்தில் கையளிக்க வேண்டும். பின்னர் தமது விண்ணப்பம் தொடர்பான அனுமதியை அதே அலுவலகத்தில் பெற்று பிரயாண முகவர்களிடம் பதிவு செய்து பயணத்தை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் வீணாக அலைக்கழிந்து பயணத்துக்காகக் காத்துக் கிடக்கும் நடைமுறையை நீக்கும்வகையில் புதிய நடைமுறை அறிவிக்கப்பட்டுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அதிகாரியான பிரிகேடியர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் தவழும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## அன்னம்மா இராமையா

சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி அன்னம்மா இராமையா அவர்கள் 15 — 04 — 1998 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் இராமையாவின் அன்பு மனைவியும், பரஞ்சோதி, கமலா ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மலிங்கம் (பரஞ்சோதி), சிவபாக்கியலக்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதாகரன், நிர்மலா, சிதம்பரநாதன், சதாசெல்வி, இரவீந்திரகுமார், சத்தியசெல்வி, இராஜ்மோகன், கஜனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சரணியா, சுபாஜினி, ஸ்கந்தன், ஐஸ்வரி, சாயிதன்யா, மயூரிகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழன் (16 — 04 — 1998) காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ச. தர்மலிங்கம்
(மருமகன்)

'' கமலபதி ''
சித்தன்கேணி.

(54954)

## திருமதி அம்பலவாணர் ஆச்சிக்குட்டி

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பை வதிவிடமாகக் கொண்டவருமாகிய திருமதி அம்பலவாணர் ஆச்சிக்குட்டி 15 — 04 — 1998 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அம்பலவாணர் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அப்பாத்துரை, கமலாம்பிகை, காலஞ்சென்ற மார்க்கண்டு, காலஞ்சென்ற நடராசா, இராசலிங்கம், பேரின்பமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலாதேவி, துரைராசா, கமலாம்பிகை, மாசில்லாமணி, சுகிர்தாம்பாள், சிதம்பரநாதன் ஆகியோரின் பிரியமுள்ள மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொறளை ஜெயவர்த்தன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு 16 — 04 — 1998 இன்று மாலை 4.00 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சி. சிதம்பரநாதன்
(மருமகன்)

(54952)

## செல்லையா சிங்கராஜா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிங்கராஜா கடந்த ஞாயிறு 12.4.98 இரவு காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா, காலஞ்சென்ற சிதம்பரம் மரியம்மாவின் மூத்த மகனும் இராசாத்தியின் அன்புக்கணவரும், கந்தப்பு, மீனாட்சியின் அன்பு மருமகனும், பிரான்சிஸ் (ஜேர்மனி), ஜேசுதாசன், சேரரூபன் ஆகியோரின் அன்புத்தந்தையும், யோசேப் (கனடா), இராயப்பு, காலஞ்சென்ற அருளப்பு ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லம்மா, வள்ளிப்பிள்ளை, காலஞ்சென்ற கனகம்மா வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற தறுமு, செல்லத்தம்பி, முருகுப்பிள்ளை, கோவிந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், டொறிற்றா, றதிக்கா, கொண்சலஸ், றதீஸ், றிக்ஸ்மன், ஜோஸ்பின் அமல், யூஜீன், வளன், அஜித், ஜெனிபா, ஜெறின், ஸக்ஸன, நிக்ஸன், றெஜினா, ஜெனிஸ், நிரோஜன், அனுஷன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.4.98) வியாழன் பி.ப. 2.00 மணியளவில் கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி. சேரரூபன்
(மகன்)

கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(54923)

## ஐயம்பிள்ளை நல்லையா

(கல்யாண புறோக்கர்)

பரராசசேகரப் பிள்ளையார் கோயிலடி இணுவில் மேற்கைச் சேர்ந்த ஐயம்பிள்ளை நல்லையா அவர்கள் 15 – 04 – 98 புதன்கிழமை அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் சறோஜினி (தங்கமணி) அவர்களின் அன்புக்கணவரும், இணுவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் சிதம்பரேஸ்வரன் அவர்களின் அன்புத்தந்தையும் ஸ்ரீமதியின் மாமனாரும் ஆவார்.

அவரது இறுதிக்கிரியைகள் 16 – 4 - 98 வியாழக்கிழமை பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நல்லையா சிதம்பரேஸ்வரன்
(மகன்)

இணுவில் மேற்கு,
மானிப்பாய் வீதி,

(54920)

எமது நேற்றைய
வெளியீடு!
கமல், பிரபுதேவா
ரம்பா நடித்த
★ காதலா காதலா
வீடியோ
CD வெளியீடுகள்!
★ கலங்கரை விளக்கம்
★ மந்திரி குமாரி
★ நவராத்திரி
★ அறிவாளி
★ தூக்குத் தூக்கி
★ ராஜ ராஜன்
★ கல்யாணப் பரிசு
★ இரத்தக் கண்ணீர்
★ என் கடமை
புதிய படப் போஸ்டர்களும் விற்பனைக்குண்டு.
சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/3467)

எமது புதிய
வெளியீடுகள்!
கமல் - பிரபுதேவா
நடித்த
காதலா காதலா
விஜய் - தேவயானி
நடித்த
நினைத்தேன்
வந்தாய்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/3456)

யாழ்.
றீகல் வெண் திரையில்
91, ஸ்ரான்லி வீதி,
மிகவும் தெளிவான
25 அடி அகலத் திரையில்
இன்று
10-30 மணிக்கு
விஜய் - ரம்பா நடித்த
நினைத்தேன்
வந்தாய்
2-30 மணிக்கு
கமல், பிரபுதேவா
சௌந்தர்யா நடித்த
காதலா காதலா
அடுத்த வெளியீடு
அருணாசலம்
CD வெளியீடு
(54955)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
30 அடி அகல
வெண் திரையில்
16 - 04 - 98 வியாழன்
ரஜனிகாந்த் நடித்த
பாட்ஷா
காட்சிகள்: 10-30, 2-30
(54946)

சிவா
திரையில்
கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.
தினசரி 10-30, 2-30
விஜய் - ரம்பா நடித்த
நினைத்தேன்
வந்தாய்
(54947)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று முதல்
விஜய் - ரம்பா
தேவயானி
மணிவண்ணன்
நடித்த
நினைத்தேன்
வந்தாய்
(புத்தம் புதிய வெளியீடு!)
நேரம்:- 10-30, 2-30
தொலைபேசி இல
070 - 212223
(54347)

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## குருசுமுத்து இராசம்மா

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி குருசுமுத்து இராசம்மா 14-4-98 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற குருசுமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் சவுந்தரம், கிளி, மரியதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற மேரிப்பிள்ளை, காலஞ்சென்ற சபீனம்மா, தம்பிராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், விமலா, யோண், சந்தியாப்பிள்ளை, மனோகரி ஆகியோரின் அன்பு மாமியாரும், திரவியம் (பிரான்ஸ்), லிண்டா (பிரான்ஸ்), எல்மோ (பிரான்ஸ்), பேபி, யோய் யோகா, ஜெயக்குமார், ஜீவா (பிரான்ஸ்), ஜெயா, நீல் (பிரான்ஸ்), யூட் (லண்டன்), சுகிர்தா, சாந்தி, மாலா, சில்வியா (ஜேர்மன்), யோசேப், இந்திரா, அனோஜன், ராசா, அஜித்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டில்க்கி, நிசாறா, நிவேதா, நிசாலிகா, ஜோண் புரோத்தன், யஸ்மின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று 16-4-98 வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுத்து சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
கு. மரியதாஸ்
(மகன்)

தென்மூலை,
அச்சுவேலி.

(54939)

திருமதி

## சதாசிவம் சாரதாம்பாள்

''கீதாஞ்சலி'', செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சாரதாம்பாள் 13 – 4 - 98 அன்று 15, சின்ன உப்போடை வீதி, மட்டக்களப்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும், முன்னாள் பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்களின் பேராசிரியர் டாக்டர் முத்துலிங்கம், சங்கீத ஆசிரியை திருமதி மங்களேஸ்வரி சோமகேசன் (திருமலை), திருமதி இராஜலக்ஷ்மி இராமலிங்கம் (மட்டக்களப்பு), திரு. தேவதாஸ் (உதவி ஆணையாளர், தேயிலைக் கட்டுப்பாட்டுச் சபை, கொழும்பு), திருமதி சந்திரமதி சிவானந்தன் (ஆசிரியை, றோ. க. த. க பாடசாலை, திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஆசிரியை திருமதி தனலக்ஷ்மி முத்துலிங்கம், மற்றும் டாக்டர் சோமகேசன் (திருமலை), திரு. இராமலிங்கம் (முன்னாள் பிரதம கணக்காளர், கொழும்பு), திரு. கா. ச. சிவானந்தன் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா. ச. சிவானந்தன்
(மருமகன்)

'கீதாஞ்சலி'
செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

(54927)

## வீ.க.சிவபுண்ணியம்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சங்கானை கிழக்கைச்சேர்ந்த வீ.க.சிவபுண்ணியம்பிள்ளை 14-04-98 இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கதிரவேலு ஆச்சிக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும், ஓய்வுபெற்ற ஆசிரியை மகேஸ்வரி சிவபுண்ணியம்பிள்ளையின் அன்புக் கணவரும், சிவஞானரத்தினத்தின் சகோதரரும், வே. க. இராசசுந்தரத்தின் மைத்துனரும், ரஞ்சிற்கனகசபை, பிறின்ஸ் இராசேஸ்வரா, ராஜ்குமார், சிவகுமார் ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 15-04-98 புதன்கிழமை நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சி. மகேஸ்வரி
(மனைவி)

தேவாலய வீதி,
சங்கானை.

(54921)

## திருமதி சிவசம்பு நாகம்மா

(பன்னாலை, தெல்லிப்பழை)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அருகாமையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசம்பு நாகம்மா 15-04-1998 நேற்றுக் காலமானார்.

அன்னார் சிவசம்புவின் (பன்னாலை, வெற்றிலை வியாபாரி) அன்பு மனைவி ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் தற்காலிக இல்லத்தில் இன்று (16-04-1998) பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சிவலிங்கம்
(மருமகன்)

ஸ்கந்தவரோதய
கல்லூரி முன்பாக,
கந்தரோடை.

(54941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள்

புதுடில்லி, ஏப். 16

இந்தியாவில் உள்ள ஆறு மாநிலங்களுக்குப் புதிய ஆளுநர்கள் இன்னும் ஓரிரு தினங்களில் நியமிக்கப்பட இருப்பதாக உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி தெரிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம், ஜம்மு காஷ்மீர், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களுக்கே புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

இதேவேளை – மிசோராம், கோவா ஆகிய மாநிலங்களின் ஆளுநர்களின் நியமனங்கள் மறு ஆய்வு செய்யப்பட இருப்பதாகவும் அத்வானி தெரிவித்தார்.

பாரதீய ஜனதாக் கூட்டணி அரசு பதவியேற்ற பின்னர் மேற்கொள்ளப்பட உள்ள முக்கியமான நடவடிக்கை இது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

## ஆளுநர் பதவிக்கு இருவரை ஜெயலலிதா சிபார்சு!

புதுடில்லி, ஏப். 16

புதிதாக நியமிக்கப்படவுள்ள ஆளுநர் பதவிகளுக்கு அ.தி.மு.கவைச் சேர்ந்த இருவரின் பெயர்களை அக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா பரிந்துரைத்திருப்பதாகப் பாரதீய ஜனதாக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க. அணியின் தலைவராக உள்ள ஜி. சுவாமிநாதன், அ.தி.மு.க. அவைத் தலைவர் இரா. நெடுஞ்செழியன் ஆகிய இரு தலைவர்களின் பெயர்களையே ஜெயலலிதா சிபார்சு செய்துள்ளார்.

தற்போதைய தேர்தல் ஆணையாளர் ஜீ. வீ. ஜீ. கிருஷ்ணமூர்த்தியை மகாராஷ்டிர ஆளுநராக நியமிக்க பாரதீய ஜனதாக்கட்சி முடிவு செய்துள்ளது.

எனினும் சிவசேனைக்கட்சி இதனை விரும்பவில்லை. ஆகவே மகாராஷ்டிரா மாநில ஆளுநாக கிருஷ்ணமூர்த்தி நியமிக்கப்படுவதில் சிக்கல் ஏற்படுமானால் அந்த இடத்துக்கு நெடுஞ்செழியன் நியமிக்கப்படலாம் என ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ)

## இந்தோனேசியாவில் பலர் காணாமற் போயுள்ளனர்

ஜகார்த்தா, ஏப். 16

இந்தோனேசியாவில் காணாமற்போவோர் பிரச்சினை தொடர்பாக ஐ. நா தலையிட்டு விசாரணை செய்ய வேண்டும் என அந் நாட்டின் சட்ட உதவி நிறுவனம் என்ற மனித உரிமைகள் அமைப்பு கோரியுள்ளது.

அரசுக்கு எதிரான உணர்வலையை அடக்க அரசியல் ஆர்வலர்களைக் கடத்துவது என்ற அரசின் அதிகாரபூர்வ கொள்கை தொடர்பாக இந்தோனேசியாவில் உள்ள மனித உரிமைகள் ஆர்வலர்கள் கவலை கொண்டுள்ளனர்.

அண்மையில் அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து சுமார் 12 பேர் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் காணாமற்போனதற்குத் தாம் பொறுப்பல்ல என்று அரசு கூறியுள்ளது. ஆனால் இராணுவத்தினர் போன்று தோற்றமளித்த சிலரால் இவர்கள் கடத்திச் செல்லப்பட்டதாக உறவினர்கள் கூறியுள்ளனர். (ஐ)

## உளவறியும் செய்மதி இந்தியா அனுப்பும்!

புதுடில்லி, ஏப். 16

பாதுகாப்புத் தேவைகளுக்காக உளவு அறியும் செய்மதி ஒன்றை இந்தியா விரைவில் விண்ணுக்கு ஏவவுள்ளதாக புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காகத் தனது நட்பு நாடுகளின் உதவியை இந்தியா கோரியுள்ளது.

இராணுவத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போதுவெளிநாடுகளின் உதவியிலேயே இந்தியா முழுக்க முழுக்கத் தங்கியுள்ளது.

இந்தியப் பாதுகாப்புத்துறைக்கு உளவறியும் செய்மதியின் அவசியம் தற்போது நன்கு உணரப்பட்டிருப்பதாக விமானப்படைத் தளபதி எஸ். கே. சரீன் பத்திரிகைப் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

[ஐ)

## ஈரான் - ஈராக் கைதிகள் விடுவிப்பு

லண்டன், ஏப். 16

ஈரானும் ஈராக்கும் தம்மிடமுள்ள கைதிகளில் ஒரு தொகுதியினரை பரஸ்பரம் விடுதலை செய்துள்ளன.

வளைகுடாப் போருக்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இரு நாடுகளாலும் கைது செய்யப்பட்ட கைதிகளில் ஒரு தொகுதியினரே விடுதலை செய்யப்பட்டனர்.

ஈராக்கியப் போர்க்கைதிகள் அறுநூறு பேரை ஈரான் விடுதலை செய்துள்ளதை அடுத்து ஈரானிய போர்க் கைதிகளில் 15 பேரை ஈராக் விடுதலை செய்துள்ளது. இரண்டு நாடுகளுக்கும் இடையே போர்க் கைதிகளை படிப்படியாக விடுதலை செய்தல் என்ற ஒப்பந்தத்துக்கு அமைவாகவே இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இம் மாதத்தில் இரு தரப்பிலும் மொத்தம் ஐயாயிரத்து 500 பேர் வரையில் விடுதலை செய்யப் பட்டுள்ளனர். (ஐ-9)

## நேபாளத்தில் புதிய பிரதமர்

நேபாளத்தின் புதிய பிரதமராக கிரிஜா பிரசாத் கொய்ராலா நேற்று மன்னர் பிரேந்திரா முன்னிலையில் சத்தியப் பிரமாணஞ் செய்து பதவியேற்றார்.

கூட்டணிக் கட்சிகளுடன் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக கடந்த வெள்ளியன்று பிரதமர் சூரியபகதூர் தாபா தனது பதவியை ராஜினாமாச் செய்தார். அதனை அடுத்தே புதிய அரசமைக்குமாறு கிரிஜா பிரசாத் கொய்ராலா அழைக்கப்பட்டிருக்கிறார்.

நேபாளத்தில் தற்போது எந்தக் கட்சியும் பெரும்பான்மைப் பலத்துடன்ஆட்சி அமைக்க முடியாத தொங்கு நாடாளுமன்றம் அமைந்துள்ளது. புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் கொய்ராலா நேபாள காங்கிரஸ் கட்சியின் தலைவராவார். இவர் 30 நாள்களுக்குள் தனது அரசின் பெரும்பான்மைப் பலத்தை நாடாளுமன்றில் நிரூபிக்க வேண்டும். (ஐ)

# இந்தியா அருகே சீனப்படைத்தளம்

## பெர்னாண்டஸ் எச்சரிக்கை


புதுடில்லி, ஏப்.16

இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் ஒதுக்குப் புறமான ஓர் இடத்தில் சீனப்படையினர் நிலை கொண்டுள்ளனர் என்றும், அங்கு ஹெலிகள் தரையிறங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் செய்தியாளர்களிடம் இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளார்.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து தயார் நிலையில் வைப்பதா என்பதைத் தீர்மானிப்பதற்கு முன்பதாக கேந்திரப் பாதுகப்புத்துறைத் தேவைகளை இந்தியா தற்போது தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## அரசியலை, அரசியல்வாதிகளை அம்பலப்படுத்துவதே எனது நாவல்



புதுடில்லி, ஏப். 16

இந்திய அரசியல் வாதிகளையும் அரசியயையும் அம்பலப்படுத்துவதே நான்எழுதிய 'த இன்சைடர்' (உள்ளே இருப்பவர்) என்ற நாவலின் நோக்கம் ஆகும்.

முன்னாள் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தாம் எழுதிய நாவல் குறித்து ''ஹோம் ரீவி''க்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

''சாமானிய மனிதர்கள் பெரும் நெருக்கடியைச் சந்திக்க இருக்கின்றனர். எனவே அவர்களை உஷார்படுத்துவதே நாவலின் நோக்கம். இந்திய அரசியலின் தன்மையில் மாற்றத்தை ஏற்படுத்த சாதாரண மனிதர்களை வலியுறுத்துவதே அப் புத்தகம்.''

அந்த நாவலில் வரும் சம்பவங்களும் சூழ்நிலைகளும் உண்மையானவை. அதில் வரும் பாத்திரங்களும் உண்மையானவை தான். ஆனால் யாரையும் குறிப்பாக காட்டுபவை அல்ல.

அரசியல் தில்லுமுல்லுகளையும், சதிச் செயல்களையும் அது அம்பலப்படுத்துகிறது. திட்டமிட்டுத்தான் அவ்வாறு அந்த நாவல் படைக்கப்பட்டுள்ளது. அந்த நாவலுக்கு ஒரு நோக்கம் உள்ளது. தாம் அறியாமல் மக்கள் எதிர்நோக்கி இருக்கும் நெருக்கடியை அவர்களுக்குத் தெரிவிப்பதே அந் நோக்கம்.

ஜனநாயகத்தின் வெளிப்படையான சதிவலைகளையே நாம் கவனத்தில் கொள்கிறோம். ஆனால் நில உடைமையின் பிடி இன்னும் தளர்ந்துவிடவில்லை.

வெறுப்பூட்டும் அதிகாரத் தரகர்களை அவர்கள் எப்படி நாட்டைச் சீரழிக்கிறார்கள் என்பதை அம்பலப்படுத்துகிறது அந் நாவல், அவர்களது எண்ணிக்கை, ஆதிக்கம், சதிவலைப் பின்னல் ஆகியவை அதிகரித்துக் கொண்டு செல்வது தான் எனக்குக் கவலை அளிக்கிறது. அவர்களைக் களையெடுக்க வேண்டும். பொதுமக்களின் நிர்ப்பந்தத்தால் மட்டுமே அது சாத்தியம் — என்று ராவ் கூறியுள்ளார்.

[ஐ]

### உலக அரங்கில்

#### மரண தண்டனை

அமெரிக்காவின் வெர்ஜினியா மாநிலத்தில் பரகுவே நாட்டுப் பிரஜை ஒருவர் விச ஊசி மூலம் கொல்லப் பட்டார்.

நீதிக்கான சர்வதேச நீதி மன்றமும், வெளிவிவகார அமைச்சர் மெடலின் அல் பிறைற்றும் மீண்டும் விடுத்த வேண்டுகோளைப் புறக்கணித்து விட்டு அந்தக் கைதிக்கு விஷ ஊசி மூலம் மரண தண்டனை நிறைவேற்பட்டது.றப் (ஐ)

#### வாஜ்பாய் எச்சரிக்கை

எதிர்க்கட்சிகளின் செயற்பாட்டைக் குறைத்து மதிப்பிட வேண்டாம் என்றும் அவை பற்றி விழிப்புடன் இருக்குமாறும் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தமது அரசின் கூட்டணிக் கட்சித் தலைவர்களை எச்சரித்துள்ளார்.

முதல் சந்தர்ப்பம் கிடைக்கும் போதே அரசைக் கவிழ்த்து விட எதிர்க்கட்சிகள் முனைப்புடன் செயற்பட்டு வருவதாகப் பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய மாநாட்டில் உரையாற்றும் போது வாஜ்பாய் தெரிவித் தார். (ஐ)

## புத்தரின் புனிதப் பல்லை கடத்தியது எவ்வாறு?

### விசாரிக்கக் கோரிக்கை

புதுடில்லி, ஏப். 16

புத்தரின் புனித தந்தம் இந்தியாவில் இருந்து எவ்வாறு தாய்லாந்துக்குக் கொண்டு செல்லப்பட்டது என்பது குறித்து விசாரணை நடத்துமாறு பிரதமர் வாஜ்பாயிடம் பௌத்த மத துறவியான வென்மகா தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து பிரதமருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்தப் புனிதப் பல் இந்திய அரசின் அனுமதி இல்லாமல் இங்கிருந்து தாய்லாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

அப் பல்லை தங்களிடம் ஒப்படைக்குமாறு சீன அரசு தாய்லாந்து அரசுக்கு நெருக்கடி கொடுத்து வருவதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது.

இப் பிரச்சினை இந்தியாவின் கௌரவப் பிரச்சினை. ஏனெனில் இந்தியாவிடம் தான் புத்தரின் உண்மையான பல் இருந்தது. புத்தரின் உடல் எரியூட்டப்பட்ட பின் அவரது அஸ்தியுடன் 4 பல்கள் சேகரிக்கப்பட்டன. அதில் ஒன்றை ஒரிசா மன்னன் கலிங்கன் இலங்கைக்கு எடுத்துச் சென்றார். அந்தப் பல் கண்டியில் உள்ள ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மற்றொரு பல் சீனத்தலைநகர் பெய்ஜிங்கில் உள்ளதாக நம்பப்படுகிறது. ஆனால் அது எப்போது யாரால் பெய்ஜிங் எடுத்துச் செல்லப்பட்டது என்று இன்று வரை தெரியவில்லை.

மூன்றாவது பல் எங்குள்ளது என்பதை ஆய்வாளர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

திபெத்தில் புத்தரின் சில உடைமைகள் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

ஆனால் பல் திபெத்துக்கு எடுத்துச் சென்றதற்கு எந்த ஆதாரமும் இல்லை. 4 ஆவது தலாய்லாமாஇதுபற்றி ஏதும் கூறவில்லை.

4 பல்களில் ஒன்று இந்தியாவில் இருந்தது. அதுதான் தற்போது தாய்லாந்துக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது

இது குறித்து விசாரிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகப் பாவனைக்கு
# 9 கணனிகள் மாஹோவில் வந்தன

யாழ்ப்பாணம், ஏப். 16 யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கென ஒன்பது கணனிகள் ''மாஹோ'' கப்பல் மூலம் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியும், இலங்கை நிதி அமைச்சும் இணைந்து நாட்டிலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் இலவசமாகக் கணனிகளை வழங்கி வருகின்றன. அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகங்களில் — 9 பிரதேச செயலகங்களுக்கான கணனிகளே கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, உடுவில், இணுவில், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களுக்கான கணனிகளே கொண்டு வரப்பட்டுள்ளன. இவற்றை உடனடியாக உரிய பிரதேச செயலகங்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு கணனியை வைத்து இயக்குவதற்குத் தேவையான பிரத்தியேக அறை அமைப்பதற்காக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் 92 லட்சம் ரூபா நிதி இலவசமாக வழங்கப்பட்டது.

(ஐ-5-ரீ)


## மாதாந்த பயிற்சிப் பரீட்சை

வினாத்தாள்களும் — புலமைப்பரிசில் வினாத் தாள்களும் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.

BOND
யாழ். நகர்

(54936)



## தேவை

ஐஸ்பழ வியாபாரிகள் தேவை.

தொடர்பு முகவரி:
அருள் கிறீம் ஹவுஸ்,
34, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.

(54932)



# 6 ஆம் மாத நினைவலைகள்



ஆண்டவன் படைப்பு: 17 - 08 - 1970

பொறாமையின் அழிப்பு: 13 - 11 - 1997

**செல்லப்பா குலசேகரம்** (குமார் – குலம்)
(மயிலிட்டி)

(ரெட்னா பேக்கரி உரிமையாளர், பேராதனைப் பல்கலைக்கழக இறுதி ஆண்டு (B. A. Final) வெளிவாரி மாணவன்]

# 12 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**செல்லப்பா சீவரத்தினம்**
(ராசு)
(மயிலிட்டி)
ஆண்டவன் படைப்பு:
20-07-1964

!!!



அமரர்
**தனபாலசிங்கம்**
(ஜேம்ஸ்)
(ஊர்காவற்றுறை)
ஆண்டவன் படைப்பு:
11-09-1963

அநியாய அழிப்பு: 30–04–1986

- குடும்பத்தினர்

மயிலிட்டி. (54926)



''தலைகொடுத்தும் கலைகாப்போம்''

பண்ணாகம் அம்பாள் கலை மன்றத்தின் கல்வி வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆம் பரிசு: இல. **1257**
2ஆம் பரிசு: இல. **872**
3ஆம் பரிசு: இல. **1501**

மேலும் 10 ஆறுதற் பரிசில் இலக்கங்கள்

**245, 859, 1361 1017, 2486, 456, 1813, 1399, 2500, 1359**

தொடர்புக்கு:
பே. இன்பராஜா (மன்றத்தலைவர்)
பண்ணாகம், சுழிபுரம்.

- நிர்வாகத்தினர்

(54937)



நெல்லியடியில் இரண்டு நாள்கள்

## Make up & Hair Style

செய்முறைப் பயிற்சி வகுப்பு
ஏப்ரல் 18 ஆம், 19 ஆம் திகதிகளில்
காலை 8. 30 மணி முதல்

★ பயிற்சித் தொடரில் கலந்து கொள்வோருக்கு சான்றிதழ் வழங்கப்படும். மேலதிக விவரங்கள் நிலையத்தில்.

## தூரிகை நுண்கலை வளாகம்

ம. ம. வி. வீதி,
நெல்லியடி.

[54942]


JAFFNA DISTRICT A.A.A

## யாழ்ப்பாண மாவட்ட அமெச்சூர் மெய்வன்மை சங்கம்

# வருடாந்தப் பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எமது முன்னைய அறிவித்தலின்படி எதிர்வரும் **19-04-1998** ஞாயிற்றுக்கிழமை காலை 9–30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

### நிகழ்ச்சி நிரல்

1. அமைதி வணக்கம்
2. அறிக்கைகள்
3. தலைவர் உரை
4. புதிய நிர்வாகிகள் தெரிவு
5. எதிர்காலத் திட்டங்கள் பற்றிய ஆலோசனை
6. வேறு விடயங்கள்

சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் கழகங்களின் சார்பில் தலா இரண்டு பிரதிநிதிகள் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பங்குபற்ற முடியும். இதுவரை தங்களது கழகங்களின் பிரதிநிதிகளின் பெயர், விவரங்களை சங்கச் செயலாளருக்கு அறிவிக்காத கழகங்கள், பொதுக்கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் அது பற்றி எழுத்து மூலம் சங்கச் செயலாளருக்கு அறிவிக்கும்படி வேண்டப்படுகின்றன. அத்தகைய உத்தியோகபூர்வ அறிவுறுத்தல் கடிதம் சங்கச் செயலாளருக்கு கிடைக்காமல் கழகப் பிரதிநிதிகள் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

அங்கத்துவக் கழகங்களின் தொடர்பு முகவரி குறித்து இதற்கு முன்னர் **1998** மார்ச் **28** ஆம் திகதிய சஞ்சீவியில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது. பெரும்பாலான கழகங்கள் அந்த விளம்பரம் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காததால், வருடாந்தப் பொதுக்கூட்டம் பற்றிய அறிவித்தல் தனிப்பட்ட முறையில் அங்கத்துவக் கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

குறிப்பு:

சங்கத்தின் தற்போதைய ஆட்சிக் குழுவில் இடம் பெறும் உறுப்பினர்கள், தொடர்ந்து தமது கழகப் பிரதிநிதிகளாகப் பணிபுரிய நியமிக்கப்படாவிட்டால், வருடாந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலின் மூன்றாவது நிகழ்ச்சி வரையே பங்குபற்ற முடியும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

நன்றி.

**செயலாளர்**
யா. மா. அ. மெ. சங்கம்.

12, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(சி/3459)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தபால் மா அதிபரை நீக்கும்வரை

# வேலை பகிஷ்கரிப்பு தொடரும்

## ஊழியர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப், 16

தபால்மா அதிபர் சோமா கொடகதெனியாவை அப்பதவியில் இருந்து நீக்கும் வரை மேலதிக நேரவேலைப் பகிஷ்கரிப்புத் தொடரும் என தபால் தொலைத் தொடர்பு ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு மாதமாகத் தொடரும் இந்தப் பகிஷ்கரிப்பால் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் சுமார் 16 லட்சம் கடிதங்கள் தேங்கிக் கிடக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது:

இந்தப் பகிஷ்கரிப்புத் தொடர்பாக அமைச்சர் அளித்த வாக்குறுதிகளைத் தொழிற் சங்கம் ஏற்றுக் கொண்டுள்ள போதிலும் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசு இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனத் தொழிற்சங்கங்கள் குற்றஞ் சாட்டுகின்றன.

இதற்கிடையில் இந்த வேலை நிறுத்தம் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வேலை நிறுத்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என அரசின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசைக் கோரியுள்ளனர்.

தபால் மா அதிபரை அந்தப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்பதே தொழிற் சங்கங்களின் பிரதான கோரிக்கையாக உருவெடுத்துள்ளது. அவ்வாறு பதவியில் இருந்து தபால்மா அதிபர் நீக்கப்பட்டால் தேங்கிக் கிடக்கும் 16 லட்சம் தபால்களை விநியோகிக்கத் தயார் எனத் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ-10)

# உள்ளகப் பயிற்சி அரங்கு அமைத்துத் தர கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ். மாவட்ட கூடைப் பந்து விளையாட்டுக் கழகங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளக விளையாட்டரங்கு ஒன்றை அமைத்துத் தருமாறு வடக்குக் கிழக்கு மாகாண கல்வி விளையாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் சிறந்த விளையாட்டு வீரர்கள் உள்ள போதும் அவர்கள் பயிற்சி பெறுவதற்கு வேண்டிய உள்ளக அரங்கு வசதி எதுவும் இல்லாதது பெருங் குறையே. அண்மையில் கொழும்பு சென்ற கூடைப் பந்து விளையாட்டு அணி உள்ளக அரங்கப் பயிற்சி பெறாத காரணத்தினாலேயே தோல்வி அடைய நேரிட்டது.— என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ-ரீ)

# இலஞ்ச ஆணைக்குழுவின் வேலைகள் பாதிப்பு!

கொழும்பு, ஏப். 16

இலஞ்ச ஆணைக்குழுவில் நிலவும் பதவி வெற்றிடங்களை நிரப்பாத காரணத்தினால் அங்கு பணிகள்யாவும் முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆணைக் குழு அமைக்கப்பட்ட பின்னர் இப்படியான குழப்பமான சூழ்நிலை இதற்கு முன்னர் எப்போதும் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று ஆணையாளர்களைக் கொண்ட இந்தக்குழுவின் ஆணையாளர் ஒருவர் மரணமடைந்துள்ளார். அதன் பணிப்பாளர்நாயகம் நீதி அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளார். அதன் நிரந்தரச் செயலாளர் ஓய்வு பெற்றுள்ளார். இதனால் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்ய தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் அவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப்படாது தேங்கிக்கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் ஆணைக் குழுவில் விசாரணைகளை மேற் கொண்டுவந்த பொலீஸ் அதிகாரிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டதாலும் அவர்களது இடங்களுக்குப் புதியவர்கள் அனுப்பப் படாததாலும் பல விசாணைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ-10)

புதுவருட வாழ்த்துக்களுடன்

பாரம்பரிய கலைகள்
மேம்பாட்டுக் கழகத்தின்
நாட்டுக்கூத்து
இசைநாடகப் போட்டி
நிதிக்காக
செல்லையா மெற்றாஸ் மயிலின்
நெறியாள்கையிலும், நடிப்பிலும் உருவான

அரியான் பொய்கையின்
வேழம்படுத்த வீராங்கனை
ஆட்ட நாட்டுக்கூத்து
தமிழ் வீரப்பெண்ணின் வீரக்கதை

இடம்: இளங்கலைஞர் மன்றம், நல்லூர்.
காலம் 19 – 04 – 98 ஞாயிறு
முற்பகல் 10, பிற்பகல் 3 மணி
(இலங்கை நேரம்)

ரிக்கட் பெறுமிடம்:
மெடி எயிட்ஸ் மருந்தகம்
644, பருத்தித்துறைவீதி, நல்லூர்.

பாரம்பரிய கலைகள்
மேம்பாட்டுக்கழகம்.

விளம்பர அன்பளிப்பு:
புதுவருட வாழ்த்துக்கள்:
ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ
13, 14, பெரியகடை, யாழ்ப்பாணம்.
[54837]

# இசைவிழா நிகழ்ச்சி

நல்லூர், ஏப். 16

நல்லூர் இளங்கலைஞர் மன்ற இசைவிழாவின் இறுதி நாளான இன்று வியாழக் கிழமை மங்கல இசை, மேலைத்தேய கீழைத்தேய வாத்திய பிருந்தா வயலினிசை, இசைக்கச்சேரி என்பன இடம் பெறும்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ–103)

# 'மேதின ஏற்பாடு குறித்து புளொட்' கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 16

தொழிலாளர் தினமான மே தினத்தை யாழ். நகரில் சிறப்பாகவும், எழுச்சியுடனும் நடத்த ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு செய்துவருகின்றது.

இத்தினத்துக்கான ஒழுங்குகளைச் செய்யும் பொருட்டு இந்த அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கிருபைராசா தொழிற்சங்கங்களின் பிரதி நிதிகளை சந்தித்து கலந்துரையாடி வருகின்றார்.

மேதினத்தன்று கூட்டங்களும், எழுச்சிப் பேரணிகளும் நடத்தப்பட உள்ளதாகவும் அவர்தெரிவித்தார். (ஐ-9)

# வீதி விபத்துக்கள் நாளாந்தம் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ். குடாநாட்டில் கடந்த திங்களன்று இடம்பெற்ற இரு வாகன விபத்துக்களில் மூவர் காயமடைந்தனர்.

முலவைச் சந்தியில் இராணுவ டிரக்வண்டியும் சைக்கிளும் மோதியதில் சைக்கிளில் சென்றவரான யாழ்ப்பாணம் கோயில் வீதியைச் சேர்ந்த ஜெயரஞ்சன் டென்சி (வயது 10) என்ற சிறுமியும் —

நாவற்குழிச் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற கொக்குவிலைச் சேர்ந்த யோகலிங்கம் மதனபவான் (வயது 21), செல்லத்துரை சிவச்செல்வன் (வயது 20) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த மூவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் (ஐ–15)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கண் சிகிச்சை

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் கண் சிகிச்சை மாதத்தில் 2 ஆவது சனிக்கிழமையும், 4 ஆவது சனிக்கிழமையும் நடைபெற்று வருகிறது.

யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் கண் டாக்டர் ஒருவரே சாவகச்சேரிக்குச் சென்று மேற்படி கண் சிகிச்சையை மேற்கொண்டு வருகின்றார். (ஐ-135)

## வாதரவத்தைச் சம்பவம்

# 16 சிப்பாய்களையும் இராணுவ பாதுகாப்பில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 16

அச்சுவேலி வாதரவத்தைப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இரட்டைக் கொலைகள் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பொலீஸ் பொறுப்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 16 இராணுவத்தினரையும் இராணுவத்தின் பாதுகாப்பில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பொலீஸ் பாதுகாப்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லை எனவும் — எனவே இவர்கள் அனைவரையும் இராணுவத்தின் பாதுகாப்பில் வைக்க வேண்டும் எனவும் இராணுவத்தினர் நீதிமன்றிடம் மனுச் செய்திருந்தனர்.

இதனையடுத்து இவர்கள் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிவான் இவர்கள் 16 பேரையும் இராணுவத்தினர் தமது பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

இதனையடுத்து இந்தப் 16 பேரும் இராணுவப் பாதுகாப்பில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தச் சந்தேக நபர்கள் தொடர்பான வழக்கு விசாரணை மீண்டும் நடைபெறும் போது இராணுவத்தினர் இவர்களை நீதிமன்றில் ஆஜர் செய்ய வேண்டும் எனவும் நீதிவான் குறிப்பிட்டார். (ஐ-9)

# வீதியின் நிலை மிகமோசம்

பண்டத்தரிப்பிலிருந்து சித்தங்கேணி ஊடாக வட்டுக்கோட்டைக்குச் செல்லும் பிரதான வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாது குண்டும் குழியுமாக உள்ளது. போக்குவரத்திற்கு மிகவும் கடினமானதாக இருக்கும் இவ் வீதியைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பிரயாணிகள் தெரிவித்தனர். (ஐ-135)

# எழுதுநர், தட்டெழுத்தாளர் தெரிவுக்கு நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 16

வடக்கு- கிழக்கு மாகாண அலுவலகப்பணியாளர்களை எழுதுநர், தட்டெழுத்தாளர்களாகப் பதவி உயர்த்துவதற்காக 1997 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 62 பேருக்கு எழுதுநர் நியமனமும், 17 பேருக்கு தட்டெழுத்தாளர் நியமனமும் வழங்கப்பட உள்ளன. இதற்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் நடத்தப்பட உள்ளன.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு வவுனியா மாவட்டங்களில் சித்தியடைந்தவர்களுக்கு இம்மாதம் 28 ஆம் திகதி வவுனியாவில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். அதேபோல் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் சித்தி அடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 30 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறும்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் வடக்குக்கிழக்குமாகாண பொது நிர்வாக பிரதிப் பிரதம செயலர் க. பரமலிங்கம் அறிவித்துள்ளார். (ஐ–ரீ)

# ச. ச. நிலையம் இயங்குகிறது

சண்டிலிப்பாய் ஏப். 16

மாதகல் மயில்வாகனப் புலவர் சன சமூக நிலையம் அண்மையில் புனரமைபுச் செய்யப்பட்டு இயங்கி வருகின்றது. (ஐ–135)

# வருடாந்த கலைவிழா

சண்டிலிப்பாய், ஏப். 16

காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபையின் 28 ஆவது வருடாந்த கலை விழாவும், திறமைச் சித்தி பெற்ற காரைநகரைச் சேர்ந்த மாணவர்களுக்கான பாராட்டு, பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஏ.ஈ. ஏகநாதன் கலந்து கொள்வார். நல்லை ஆதீன முதல் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியுரை நிகழ்த்துவார். (ஐ–135)

# பண்ணிசை வகுப்பு

கொழும்புத்துறை, ஏப். 16

மானிப்பாய் அருள்மிகு ஸ்ரீ வேலக்கைப்பிள்ளையார் கோயில் மடத்தில் பிரதி வெள்ளி சனிக்கிழமைகளில் பிற்பகல் 2.30 மணிதொடக்கம் பண்ணிசை வகுப்பு செல்வி இ. சுப்பையா பிள்ளை தலைமையில் ஆலயத்தின் சார்பில் நடத்தப்பட்டு வருகிறது. (ஐ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சட்டப் புத்தகங்கள், கோவைகள், கதைப் புத்தகங்கள், என்சைக்குளோபீடியா ரைப்ரைற்றர், கட்டில், கதிரைகள், மேசைகள், அலுமாரி. சோக்கேஸ், பித்தளைச் சாமான்கள் மேலும் பல விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 06, யாழ். வீதி, யாழ்ப்பாணம். [54922]

### திருத்துதல்

சகல விதமான தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் (Type Writers) சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் குறித்த தவணையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: ''சாயி', தட்டச்சு திருத்தும் சேவை, 116, பலாலி வீதி (கராஜ் அருகில்) கந்தர்மடம், யாழ்ப்பாணம். (54760)

### தவறிவிட்டது

லெனின் றொபின்சன் பெற்றீனா ஜெயந்தினி என்பவரது இல. 688451175V தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் என்னும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். [54929]

நாகராஜா பாலச்சந்திரன (நாவற்குழி, கைதடி) என்பவரது 650901886V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன நாவற்குழியிலிருந்து கல்வியங்காடு வரையிலுள்ள பகுதியில தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். குணபாலா வெல்டிங்வேக்ஸ் சொப், கல்வியங்காடு, அல்லது நாவற்குழி, கைதடி. [54930]

### யாழ்ப்பாணம்

அராலியூர ந. சுந்தரம பிள்ளை எழுதிய நாடகம் எழுதுவது எப்படி? என்ற கட்டுரையைத்தான் வானொலியில் சொல்கின்றனர். அவரது நூல்கள்: 1. நாடகம் எழுதுவது எப்படி? 2. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் ரூபா 50. (54753)

### திருத்த வேண்டுமா?

ரி. வி., றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும், ரி. வி. அன்ரனாக்கள் பொருத்திக் கொள்ளவும் நாடுங்கள்; வீனஸ் சனபாலசிங்கம் (B.Sc. Ceylon Dip In Electronic Engineering London) 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம் [சி/32?4[

## அருள்நெறி வெளியீடு

வடபிராந்திய இந்துப்பேரவையின் 'அருள்நெறி' செய்திக்கதிர் அறிமுகவிழா கடந்த புதன்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது (ஐ)

## தேவை

போட்டோ ஸ்ரற் பிரதி செய்யும் வேலை பழகுவதற்கு பெண்கள் இருவர் தேவை. நேரில் சமுகந்தரவும்.

சன்லைற்
றைக்கிளினேர்ஸ்,
பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.
(54915)

## வாழ்த்துகின்றோம்

கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய
பரிபாலன சபைத் தலைவரும்,
பிரபல சமூக சேவையாளரும்,
அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய

**திரு. கந்தையா இராமநாதன்**
**திருமதி செல்வராணி இராமநாதன்**

அவர்கள் திருமணப் பொன்விழா காணுவதையிட்டு எமது சபை பெருமிதம் அடைகின்றது.

இவர்கள் சகல செல்வங்களும் பெற்று சீர் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல அம்பிகையின் அருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

ஆலய பரிபாலன சபை

கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்.

(50031)

## அறிவித்தல்

மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
''மகாஜனன்''
சஞ்சிகை வெளியீட்டுக்கான அன்பளிப்பு

### நாடக விழா


1. மகாஜனக் கல்லூரி மாணவிகள் வழங்கும் நாட்டிய நாடகம்
2. யாழ். நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் சத்தியவான் சாவித்திரி

இடம்: இராமநாதன் கல்லூரி மண்டபம்
நாள்: 16 - 04 - 98 வியாழன்
நேரம்: பிற்பகல் 2 30 (புதிய நேரம்)

—அதிபர்

(54524)

## ஓராண்டு நினைவுநாள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06 | 16 |
| 10 | 04 |
| 1946 | 1997 |

### கனகன் தங்கராசா

(இ. போ. ச. நடத்துனர் - பருத்தித்துறை )

அன்புள்ளமே! எமைப் பெற்ற செல்வமே!
அன்பால் குளிர்வித்த ஓடை ஆகியதேன்? பாடை
கண்திறந்து பார்ப்பீர்கள் என்று காத்திருந்தோம்
பாராமல் போனீர்களே வெகுதூரம்
மறைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்தாள் புதல்வி
ஆனாலும்
முடியவில்லை உங்கள் செல்வ முகம் காண
ஆண்டொன்று ஆனாலும் உங்கள் நினைவுகள்
மறையாது.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, பிள்ளைகள்.

வல்லைறோட்,
தொண்டமானாறு.

(54908)

## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
கொடிகாமம்

### கிளைக்குழுத் தேர்தல்

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 18 கிளைகளுக்குமான கிளை நிர்வாக சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான நியமனப் பத்திரங்கள் 1998 - 04 - 18 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் முற்பகல் 10 மணிக்கும் இடையில் கீழ்க்காணும் இரு கிளை நிலையங்கள் தவிர்ந்த ஏனைய கிளைகள் அவ்வக் கிளை நிலையங்களின் விற்பனை நிலையங்கள்/ கிளைக் கட்டடங்களில் உதவித் தேர்தல் உத்தியோகத்தர்களால் பெற்றுக் கொள்ளப்படும். தேர்தலில் பங்குபற்றத் தகுதியுள்ளோர் தத்தமது கிளை நிலையங்களில் ரூபா 10 ஐச் செலுத்தி உரிய நியமனப் பத்திரங்களைப் பெற்று பூரணப்படுத்தி சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கீழ்க்காணும் இரு கிளை நிலையங்களின் நியமனப் பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும் இடங்கள் வருமாறு:-


1. நாவற்காடு - கிளை இல. 10 - நாவற்காடு மேற்கு விற்பனை நிலையம்.
2. மிருசுவில் - கிளை இல. 12 - நவஜீவனம் விற்பனை நிலையம்.

சி. ஐயாத்துரை,
தேர்தல் உத்தியோகத்தர்,
தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்
கொடிகாமம்.

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
04 - 04 - 98

(சி-3419)

## இரு விழிகளும் இமைக்க மறந்த ஈராண்டு நினைவலைகள்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 1927 | 1996 |
| 07 | 04 |
| 08 | 16 |

### Dr. நாகலிங்கம் இராஜநாதன்

திதி:- சதுர்தசி

ஈராண்டும் எப்படி சென்றது அண்ணாவே!
காலனது கணக்கு ஏட்டில்
பதிவுதான் முந்தியது போல்
கண்ணில் தெரியும் உம் உருவம்
கண்ணீரைத் தான் வரவழைக்கின்றது!
விதி இதுதான் எனத் தெரிகிறது
ஆனாலும் மனம் பேதலிக்கின்றதே ஏன்?
மீண்டும் ஒருமுறை துரை அண்ணாவே!
விரைந்து வாரீரோ எங்களைப் பார்ப்பதற்கு.

உங்கள் நினைவால் துயருறும்
அன்பும் பாசமும் கொண்ட

சகோதர சகோதரிகள்

பூம்பந்தல்,
மானிப்பாய்.

([illegible])

## 31-ம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு: | மறைவு: |
|---|---|
| 04 | 17 |
| 05 | 03 |
| 1929 | 1998 |

### அமரர் சு. கந்தையா

(துன்னாலை தெற்கு, கலிகைச் சந்தி, கரவெட்டி.)

எம் வாழ்வில் ஒளியேற்றியவரே!
எம் உயர்வுக்கு வழிகாட்டியவரே!
எம் இதயங்கள் உங்கள் நினைவை விட்டகலாது.
எம் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைனருக்கும்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

**16 - 03 - 98** வியாழக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

துன்னாலை,
கலிகைச்சந்தி,
கரவெட்டி.

[54899]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தாமதம் வேண்டாம்

புத்தாண்டோடு புதிய செய்தி— நல்ல செய்தி— ஒன்று வந்திருக்கிறது. இப்போது பிரிவுண்டு, பிளவுண்டு நிற்கும் தாம் ஓர் அணியில் சேரவேண்டும் என்ற மனப்பாங்கு (Mood) தமிழ் அரசியல் கட்சிகளிடையே உண்டாகி இருப்பதே அந்தப் புதிய செய்தியும், நல்ல செய்தியுமாகும்.

ஜனநாயக வழியில் இயங்க முன்வந்துள்ள— இயங்குகின்ற— தமிழ்க் கட்சிகள் ஓர் அணியில் நின்று தமிழர் சுதந்திரத்துக்காகவும், உரிமைகளுக்காகவும் ஒரே குரலில் ஒலிக்க வேண்டும். அதன் மூலம் அரசுக்கும், தெற்கின் எதிரணிக்கும் அழுத்தம் கொடுக்கவேண்டும் -என்று இப்பத்தியில் அடிக்கடி இடித்துரைத்து வந்தோம்.

தமிழ் கட்சிகள் ஓர் அணியில் சேராவிடில், ஒரே குரலில் ஒலிக்காவிடில், அவை தம்மை மக்கள் அமைப்புகள் என்று கூறுவதில் அர்த்தமில்லை என்று கண்டித்திருந்தோம்.

கட்சி மற்றும் சுயநலன்களை ஒதுக்கி வைத்துவிட்டு, மக்கள் உரிமைகளுக்காகக் குரல்கொடுக்க வேண்டிய இக்காலத்தில் ஒற்றுமைப்படுவார்களா என்றும் மக்கள் சார்பில் இப்பத்தியில் கேள்வியும் கேட்டிருந்தோம்.

அந்த வகையில்—

தாங்கள் எல்லோரும் ஒற்றுமைப்பட வேண்டும் என்ற உணர்வு தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இப்போதாவது வந்ததே என்று மகிழ்வுறுகின்றோம். தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் ஆகியகட்சிகளின் யாழ். மாவட்ட அமைப்பினர் தனித்தனியாக விடுத்துள்ள புத்தாண்டுச் செய்திகளில், மக்கள் வலியுறுத்தி வந்த ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்திருப்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

இது, ஆரம்ப முயற்சியாக — செயலாக— மொட்டவிழ்த்து வெற்றியில் மலர வேண்டும். வெறும் அறிக்கை — எழுத்து —ஏட்டுச் சுரக்காயே. அந்தச் சுரக்காயாகவே நீண்ட காலத்துக்கு இருந்துவிடக் கூடாது.

தமிழ்த் தலைமைத்துவத்தில் உள்ள பிளவுகள், தமிழ் மக்களின் உரிமைகள் சுதந்திரங்களை வழங்காது இழுத்தடிக்கவும், தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகள் போன்று கேவலமாக நடத்தவும், அடக்குமுறைக்கு ஆட்படுத்தவும், அழிக்கவும் சிங்கள அரசுக்கு பலமான ஊன்றுகோல்களாக நிற்கின்றன.

தமிழ்த் தலைமைத்துவத்தில் உள்ள பிளவுகள், பூசல்கள், வேறுபாடுகளை தமக்குத் தக்க ஆயுதங்களாக்கி தமிழர்களை மேலும் பலவீனமாக்கி அவர்களின் உரிமைப் போராட்டத்தை சிங்கள அரசுகள் தொடர்ந்து நசுக்கி வருகின்றன.

ஆகையால் இதுவரை இருந்த வேறுபாடுகளை நீக்கி ஒன்றுபடுவது என்ற உணர்வு வந்த பின்னரும், தாமதம் ஆகாது. உடனடியாகச் செயற்பாடு தேவை. தமிழ் மக்கள் அதற்காக ஆவலோடு காத்திருக்கின்றார்கள். இன்றே செய்யுங்கள்; நன்றே செய்யுங்கள்; இடையில் குழம்பிவிடாதீர்கள்; குழப்பிவிடாதீர்கள் தலைவர்களே!

# வறுமை நிவாரண நிறுத்தத்தால் 32 ஆயிரம் குடும்பங்கள் நிர்க்கதி

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 31 ஆயிரத்து 753 குடும்பங்கள் நிவாரண உதவிகள் எதுவுமின்றிப் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றன.

வறுமை நிலையை அடிப்படையாகக் கொண்டு இவர்களுக்கு உணவு முத்திரைத் திட்டத்தின் மூலம் நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. 1996 ஆம் ஆண்டுமுதல் இந்த

## 'சமுர்த்தி' நடைமுறைக்கு வருமா?

உணவு முத்திரைத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதால் தமது அன்றாட வாழ்க்கையை நடத்த முடியாத நிலையில் இவர்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இடம்பெயர்வு மற்றும் யுத்த நெருக்கடிகளினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் இவர்களின் வாழ்க்கை நிலை உதவிகள் எதுவும் அற்று கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் 60 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் வறுமை நிலையி

**கேசரி**

லுள்ள 13 ஆயிரத்து 93 குடும்பங்கள் நிவாரண உதவிகள் இன்றித் தவிக்கின்றன.

இதேவேளை வடமராட்சியில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 10 ஆயிரத்து 224 குடும்பங்களும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 7 ஆயிரத்து 631 குடும்பங்களும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 805 குடும்பங்களும் உணவு முத்திரைத் திட்டம் நிறுத்தப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ளன.

அன்றாடங் காய்ச்சிகளான இந்த மக்களுக்கு வறுமை நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று பல தொண்டர் நிறுவனங்கள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளன.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமும் இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுடனும், அமைச்சுடனும் தொடர்பு கொண்டுள்ள போதிலும் இது வரைக்கும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் நிரந்தரமாகக்குடியிருக்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களைப் புறக்கணித்து விட்டு இப்பகுதிகளில் தற்காலிகமாக உறவினர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் வெளி மாவட்டத்தைச்சேர்ந்தவர்களுக்கும், வன்னி சென்று மீளக்குடியேறியோருக்கும் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

தென்மராட்சியில் பாதுகாப்பு அரண் காரணமாக தமது இருப்பிடங்களை விட்டு அயற் கிராமங்களில் தங்கியிருக்கின்ற 416 குடும்பங்களுக்கும் இங்கு வசிக்கும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த 957 குடும்பங்களுக்கும் வன்னியிலிருந்து மீளக் குடியேறிய ஆயிரத்து 293 குடும்பங்களுக்கும்நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்த நிவாரணமும் விரைவில் நிறுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது அரசின் தலையாய பணிகளில் ஒன்றாகும்.

1930 ஆம் ஆண்டு இலங்கையில் வறுமை ஒழிப்புத் திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. வறுமை என்பது அரசினால் தீர்த்து வைக்கப்பட வேண்டிய முக்கியமானதும் அவசரமானதுமான பிரச்சினை ஆகும்என்பதனை ஏற்றுக்கொண்டே இத்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

வறியோருக்கான சகாய கொடுப்பனவுடன் 1930 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் அடிப்படையில் 1934 -ல் இலவச கல்வித் திட்டமும், 1968 இல் பாடசாலைகளில் பிஸ்கெட் வழங்கும் திட்டமும், 1973 இல் திரிபோஷா நிகழ்ச்சித் திட்டமும், 1978 வரை அரிசி மானியத் திட்டமும், 1979 இல் உணவு முத்திரைத் திட்டமும் மாறி மாறி வந்த அரசாங்கங்களினால்வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன.

**செய்தி மடல்**

1989 ஆம் ஆண்டு ''ஜனசக்தி நம்பிக்கை நிதியம்'' ஆரம்பிக்கப்பட்டுதேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் தென்பகுதியின் பல இடங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

வடபகுதியில் சமுர்த்தித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்ற போதும் இதுவரையும் நடைமுறைக்கு வரவில்லை. ஆனால் சில இடங்களில் சமுர்த்தி நியமனங்கள் வழங்கப்பட்டு அதை நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாக அறியக்கூடியதாக இருக்கிறது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களை சமுர்த்தித் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்வதற்காகத்தான் அவர்களுக்கான உணவு முத்திரைத்திட்டம் நிறுத்தப்பட்டதாகக்கூறப்படுகிறது. அவ்வாறாக இருந்தால் சமுர்த்தி நடைமுறைக்கு வந்த பின்னர் அதனை நிறுத்தியிருக்கலாம் அல்லவா? ஒரு வருட காலத்துக்கும் மேலாக நிவாரண உதவிகள் இன்றி வறியவர்கள் படும் வேதனையை யாரிடம் முறையிடுவது?

வறுமை நிவாரணப் பொருள்கள் பெறும் உரிமை இந்த மக்களுக்கு உண்டு என்பதனை உணர்ந்து அரச அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும். சமுர்த்தித் திட்டம் உடன் நடைமுறைப் படுத்தப் படவேண்டும். இல்லாவிட்டால் சமுர்த்தி நடைமுறைக்குவரும் வரையிலாவது இந்த மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்,

இவ்வாறான நிலையிலுள்ள தென்பகுதி மக்களுக்கு அரசும், அரசு சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் பெருமளவில் உதவி வருகின்றன. எனவே இந்த மக்களின் பிரச்சினையைக் கவனத்தில் எடுத்து உடன் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

(★)

## வட இந்து மகளிர் கல்லூரியில் புறநிலைப் படிப்புகள் அலகு

வடமராட்சி, ஏப். 16

யாழ். பல்கலைக்கழக புறநிலை படிப்புகள் அலகின் உப பிரிவு ஒன்று வடமராட்சியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை யாழ், பல்கலைக்கழக பேரவை வழங்கியுள்ளது.

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் உள்ள கட்டடம் ஒன்றில் இம்மாத நடுப்பகுதி முதல் இப்பிரிவு செயற்படும்.

இப்பிரிவில் முதற்கட்டமாக ஆங்கிலம். அலுவலக நிர்வாகம் போன்ற பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

(ஐ-173)

## அரச அதிகாரியைத்தடுத்த நால்வர் நீதிமன்றில் ஆஜர்

நல்லூரில் உள்ள அரச அலுவலகம் ஒன்றின் உயர் அதிகாரி ஒருவரை வீட்டிலிருந்து வெளியேறாத படி வேலி அமைத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட நால்வர் யாழ். மாவட்ட நீதிமன்றில் மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை குறிப்பிட்ட அரச அதிகாரி கடமைக்குப் புறப்பட இருந்த சமயம் அவரை வீட்டை விட்டு வெளியேற விடாமல்இவர்கள் நால்வரும் வேலி அமைத்ததாக பொலீஸாரிடம் முறையிடப்பட்டது.

இது தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் மனு ஒன்றைப் பொலீஸார் தாக்கல் செய்தனர். அத

( 7 ஆம் பக்கம் பார்க்க)

## 3 கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 16

காங்கேசன்துறை துறைமுகத்தில் தற்பொழுது மூன்று கப்பல்களிலிருந்து உணவுப் பொருள்கள்உட்பட பல பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன.

''மஹோ'' கப்பலில் தனியாருக்கும். அரச திணைக்களங்களுக்குமுரிய பொருள்களும் ''வாதுவையில்'' தனியாருக்கான பொருள்களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

''லங்கா முடித'' கப்பலில் எடுத்துவரப்பட்ட ஆயிரத்து 8 50 மெற்றிக் தொன் சீனியும், 200மெற்றிக் தொன் பருப்பும், 550 மெற்றிக் தொன் அரிசியும் இறக்கப்படுகின்றன.

(ஐ-5ரீ)

### நாளை

சித்திரை -04

வெள்ளிக்கிழமை

திதி: பஞ்சமி
முற்பகல் 10.19 வரை
நட்சத்திரம்: மூலம்
பின் இரவு: 4.58 வரை
சுபநேரம்: 6.04-7.34
ராகு காலம்: 10.34- .12.04
(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஆத்மாவின் சட்டரீதியான பாதுகாவலன் சந்தோஷமே. அந்தச் சந்தோஷந்தான் [illegible] வருவாய் [illegible].

—இங்கர்ஸால்

## சாயி சிந்தனை

ஒருநிமிடம் சிந்தித்துப் பாருங்கள். மனிதன் தன் தெய்வீகத் தன்மையை எப்படி மறந்தான்? தன்னைச் சிறுமைப்படுத்தும் இந்த மருள் என்கின்ற அறிவு மயக்கத்துக்குள் எப்படி வீழ்ந்தான்?

கணநேரமே நினைக்கும் இன்பங்களுக்காக மனமானது பறந்து திரிவதன் விளைவே அது என்பது அப்போது தெரியவரும். இதற்கு பரிகாரம் என்ன?

'' வழிபாடு! '' என்று ஒரே சொல்லில் பதில் கூறலாம். வழிபாடு இயற்றுவது போல் செயலனைத்தையும் செய்யுங்கள். 'யத் பாவம் தத் பவதி' அதாவது, ''நீ எதைப் பாவனை செய்கிறாயோ அதுவாக ஆவாய் '' என்பதாகும்.

தெய்வீகப் பேரன்பின் சிறப்பை உணர்த்துவதற்காக அவதாரம் வந்துள்ளது. பிரேமையைச் சொரீவதன் மூலம் இறைவனைத் தேடுவதற்கான ஆர்வத்தை உங்கள் இதயங்களில் ஊன்றி விடுகின்றது.

மனிதன் கற்றுத் தேறிய விடய அறிவு மலையாய் உள்ளது. ஆனால் மெய்யறிவு எங்கோ பின்தங்கி நிற்கின்றது. தெய்வத்தின் பேரில் உள்ளன்பு உண்டாக வேண்டுமாயின் அதன் பேரன்பை அனுபவித்திருக்க வேண்டும். மனிதன் எங்கும் நிறைந்ததான மெய்ப்பொருளின் தன்மையை ஆழ்ந்து ஆராயத் தக்படிக்குத் தன்னை உயர்வு படுத்தவேண்டும்.

(ஆதாரம்: Sathya Sai Speaks Vol: II)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து இளைஞர் பேரவையின் மாநாடு

கொழும்புத்துறை, ஏப். 16

இலங்கை இந்து இளைஞர் பேரவையின் 12 ஆவது தேசிய இந்து இளைஞர் மாநாடு எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமையும், 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் காலை 9.00 மணி முதல் இரவு 7-00 மணி வரை திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் பேரவையின் தலைவர் வ. முருகப்பன் தலைமையில் நடைபெறும்.

(ஐ-30)

# போராட்டத்தின் பின்னடைவுக்கு தமிழர் உட்பிளவுகளே காரணம்

## மாணிக்கதாஸன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 16

தமிழர்களது உரிமைப் போராட்டம் ஒரு பின்னடைவைச் சந்தித்துள்ளமைக்குப் பிரதான காரணம் எமக்கு இடையிலுள்ள பிரிவுகளும் பிளவுகளுமே ஆகும், இதனை நிவர்த்தி செய்து ஒற்றுமைப்படுத்தும் சக்தியாக தமிழர் விடுதலைக் கூட்டணியை நம்பி இருந்தோம். ஆனால் அவர்களது அண்மைக்கால நடவடிக்கைகள் எமது நம்பிக்கையை இழக்கச் செய்து விட்டன.

புளொட் அமைப்பின் உப தலைவர் மாணிக்கதாஸன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

எமக்கு இடையிலுள்ள பிளவுகளைச் சீர் செய்வதில் கூட்டணியினர் ஈடுபடுவார்கள் என நம்பியிருந்தோம். ஆனால் அவர்கள் ஆயுதம் ஏந்தியவர்கள், நிராகரிக்கப்பட வேண்டியவர்கள், தீண்டத்தகாதவர்கள் என்பது போன்று கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். ஆயுதம் ஏந்த வைத்தவர்களே இன்று ஆயுதம் ஏந்தியவர்களை நிராகரிக்கும் போது அவர்கள் ஒற்றுமை முயற்சியில் ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கையை நாம் இழந்துள்ளோம்.

எமதுகட்சி பல அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொண்டுவருகின்ற போதிலும் எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப மக்கள் சக்தி மூலமே ஒருதீர்வினை உருவாக்க முடியும் எனவும் நாம் நம்புகின்றோம்— என்று தெரிவித்தார்.

இந் நிகழ்வில் யாழ். மாவட்ட அமைப்பாளர் கிருபைராசா, பிரதேச சபைத் தலைவர் அன்ரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-9)

## சாவகச்சேரி பருத்தித்துறை வீதி சேதம்

பருத்தித்துறை — சாவகச்சேரி வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. குறிப்பாக கலிகைச் சந்தி தொடக்கம் சரசாலை கனகம்புளியடிச் சந்திவரை இவ்வீதி குண்டும் குழிகளுமாக உள்ளது.

இப்பாதையூடாகப் பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரிக்கு பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் வீதி மோசமாகப் பழுதடைந்துள்ளமையால், இவ்வீதியால் பஸ் வண்டியை ஓட்டிச்மிகச் செல்வது சிரமமாக இருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-173)

## நல்லைக்குமரன் மலர் - 1998 (6)

இளைய தலைமுறையினரிடையே சமயப்பற்றினையும், இறைபக்தியையும் ஆன்மீக, உணர்வினையும் மேலோங்கச் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு வழமைபோல் இவ்வருடமும் எமது குழுவினால் வெளியிடப்படவுள்ள மேற்படி மலருக்குகந்த கட்டுரைகளை/ கவிதைகளை துறைசார்ந்த அறிஞர்கள் மற்றும் சமயப் பெரியார்களிடமிருந்து நாம் எதிர்பார்க்கின்றோம்.

பொருத்தமான ஆக்கங்களை எதிர்வரும் **31-05-98** ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மலரில் இடம்பெறத் தகுந்ததும், தரமானதுமான ஆக்கங்கள் நிச்சயமாகப் பிரசுரிக்கப்படும்.

**சைவசமய விவகாரக் குழு,**
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(சி/3458)

## சிவாச்சாரிய அபிஷேகம்

உ

அளவெட்டி தெற்கு பெருமாக்கடவை
விநாயகர் தேவஸ்தானத்தில்
அந்தணராகப் பணிபுரியும்
பிரம்மஸ்ரீ
**வாஞ்சிநாதஐயர் நவநீதசர்மா**

அவர்களின் ஆசாரிய அபிஷேகம் **17 – 04 – 98** வெள்ளிக்கிழமை காலை 7. 45 முதல் 10 மணி வரையுள்ளசுபமுகூர்த்தத்தில் இணுவில் காயத்திரிபீடம் தர்மசாஸ்தா குருகுலத்தில் நடைபெறவுள்ளது.

தீட்சாகுரு:

சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்
( குருகுல அதிபர் )

அன்று மாலை 3 மணியளவில் சிவாச்சாரியர் இல்லத்தில் அன்பர்களுக்கு ஆசி வழங்குவார்.

வா. நவநீதசர்மா குடும்பத்தினர்
[ ரமணி ]

பெருமாக்கடவை,
அளவெட்டி தெற்கு.

[54934]

## மகானந்த வாசா தொலைபேசிச் சேவை

எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு
இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதோடு

15-04-98 முதல் எமது தொலைபேசிச் சேவை வெளியூர், உள்ளூர் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொலைபேசி இல. 070 - 212216

**மகானந்த வாசா**
**தொலைபேசிச் சேவை**
(கொக்குவில் தபாலகம் முன்பாக)
கொக்குவில்.

(50033)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஏப். 16

கொழும்புத்துறைஆத்தியம் பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு அபரபட்ச சதுர்த்தித் திருவிழா விசேட அபிஷேகம், பூசை ஆராதனையுடன் நடைபெறும்.

ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ க. மு. ஜெகநாதக்குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் அருள் மிகுஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பருத்தித்துறை, ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள் ''வேடன் அருளிய பூசை'' என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இந் நிகழ்விற்கான அறிமுகவுரையை பருத்தித்துறை சட்டத்தரணி இ. உருத்திரா நிகழ்த்துவார்.

(ஐ-30)

★ ★ ★

அளவெட்டி ஸ்ரீ நாகவதர நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை ஸ்ரீ ராம நவமி விழா காலை [illegible] மணி முதல் இடம்பெறும்.

(ஐ-100)

## பிற்போடப்பட்டுள்ளது

**யாழ். மாவட்ட**
**சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தால்**

**14 - 04 - 98** அன்று நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு **15 - 05 - 98** இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

கல்விசார், விளையாட்டுத்துறைசார் போட்டிகளின் மாவட்ட மட்டத்திலான தேர்வுகள் வைகாசி மாதம் இடம்பெறும். சமாச மட்டப் போட்டிகள் சித்திரை மாதம் நடத்தி முடித்து தேர்வுகள் அனுப்பப்பட வேண்டும்.

செயலாளர்.

[54933]

## 33 ஆம் நாள் நினைவுகள்

**வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்**

தோற்றம்: **21—11—1925**

மறைவு: **15—03—1998**

எங்கு சென்றீர்கள் அப்பா, எங்கு சென்றீர்கள்?
தந்தை, தாயாய் இருந்து எமை வளர்த்த அண்ணா
என்று சகோதரர் மூவர் கதறி அழ
உங்கள் ஆறு பிள்ளைகளும் ஆறிடத்தில் நின்று
அப்பாவைக் கடைசி நேரத்திலும் பார்க்கக்
கிடைக்கவில்லையே – எனப் பரிதவிக்க

எங்கு சென்றீர்களப்பா, எங்கு சென்றீர்கள்?
உங்கள் அருமைப் பேரக் குழந்தைகள் சீராட்டித்
தாலாட்டி, சிற்றுணவு வாங்கித்தரும் ஐயாவை
தினந் தினம் நினைத்து ஏங்கி அழுவது – தெரியாதா
அப்பா உங்களுக்கு?
பெரிஐயா பெரிஐயா என பெறாமக்கள்
துடியாய்த் துடிப்பதுவும் தெரியவில்லையோ அப்பா?

பிள்ளை, பிள்ளை என்றழைக்கும் உங்கள் வாய்
மௌனமானதேனோ அப்பா?
அன்னையும் தந்தையுமாயிருந்து எமை வளர்த்து
ஆளாக்கிய எமது குலக்கொழுந்தை வாழ்நாளில்
மறப்போமா நாங்கள்.
மறக்க மாட்டோமப்பா! நாம் மறக்க மாட்டோம்!

எமது அன்புத் தெய்வத்தின் மறைவறிந்து நேரிலும், கடித மூலமும், தந்திமூலமும், தொலைபேசி ஊடாகவும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

16—04—1998 அன்று நடைபெறும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம், மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்:

மறைந்த எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

''அன்னை இல்லம்''
இராஜ வீதி,
அச்சுவேலி.

(54931)

## ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

கணக்கீடு திரு. பாலவாசன்

A/L 98 இல் பரீட்சை எடுக்கும்
மாணவர்களுக்கான

**விசேட மீட்டல் வகுப்பு**

**17 - 04 - 98** வெள்ளி **4. 00 — 5. 30** மணி

(54925)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

செல்வம் மில் வீதி, உடுப்பிட்டி
பெரியதம்பிரான் கோயில்
கட்டட நிதிக்காக

14 - 04 - 1998 அன்று நடைபெற்ற
அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆவது பரிசு - இல. 1083
2ஆவது பரிசு - இல. 542
3ஆவது பரிசு - இல. 1098

ஆறுதல் பரிசுகள்:
இல. 2149 இல. 138 இல. 2037
இல. 2176 இல. 2432
இல.702 இல. 1987

(14943) - நிர்வாகம்

## பிற்போடப்பட்டுள்ளது

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தால் **14 — 04 — 1998** ஆம் திகதி நடத்தப்படவிருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பிற்கான குலுக்கல் திகதி **31 — 05 — 1998** ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இளைஞர் முன்னேற்றக் கழகம்
சித்தன்கேணி (54950)

## கிறிஸ்தவ இறையியற் கல்லூரி
மருதனார்மடம்

## வழியனுப்பு விழா

காலம்: 18-04-1998 சனிக்கிழமை
காலை 10-00 மணி

இடம்: உடுவில் மகளிர் கல்லூரி மண்டபம்

தலைமை: அருள்மிகு பேராயர்
எஸ். ஜெபநேசன் அவர்கள்

உரை: அருள்மிகு பிதா F. நிக்கொலஸ்
(அதிபர், பிரான்சிஸ் சேவியர் இறையியற் கல்லூரி, கொழும்புத்துறை)

உங்கள் பிரசன்னத்தையும் ஜெபத்தையும் ஆசிக்கின்றோம்.

அதிபர்,
கிறிஸ்தவ இறையியற் கல்லூரி.

(சி/3461)

க. பொ. த.(சா. த.)—97
தொழில் முன்னிலைப்பாட

## செய்முறைப் பரீட்சை

பாடசாலை, தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் கவனத்துக்கு

1. மனையியல் செய்முறை பரீட்சை நிலையமான யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, யா/ இராமநாதன் கல்லூரிக்கு இடம்மாற்றப்படுகின்றது.
2. விவசாயம், மனையியல் தவிர்ந்த ஏனைய தொழில்நுட்பப் பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இதற்கு அமைவாக சகல பரீட்சார்த்திகளும் தொழிற்படுவதுடன் பாடசாலை பரீட்சார்த்திகள் தங்கள் அனுமதி அட்டைகளை அதிபரிடம் இருந்து பெற்றுக்கொள்ளவும்.

சி. சிவராஜா,
கல்விப்பணிப்பாளர்,
யாழ். வலயம் 02.

(சி/3464)

## என்றும் நல்லாசிகள்!

மல்லாகம் நீதிபதி **திரு. மு. திருநாவுக்கரசு** முன்னிலையில் அண்மையில் சமாதான நீதிவானாக (J.P.) பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டவரும், வலி.மேற்கு விவாக, பிறப்பு, இறப்புப் பதிவாளரும், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய தர்மகர்த்தா, பரிபாலன சபைப் பொருளாளரும், பரம்பரை உறுப்பினருமான

### உயர்திரு. குமாரசாமி கணேசதாஸன்

அவர்களின் சமூகப்பணி மேலும் சிறப்புற்றோங்க அம்பிகையைப் பிரார்த்தித்து ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.

பிரதம குரு
கிரியாகலாப முக்தாமணி
சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக் குருக்கள்
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்

(54940)

## உணவு முத்திரை

நவாலி, ஏப். 16

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உணவு முத்திரைகள் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவுக்கு நேற்று வந்து சேர்ந்தன.

இவற்றை பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான முயற்சியில் புனர்வாழ்வுப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். (இ-100)

### அரச அதிகாரியை..

(ஏழாம் பக்கத் தொடர்)

னைத் தொடர்ந்து நீதிவான் மு. திருநாவுக்கரசு சம்பந்தப்பட்ட அரச அதிகாரி வீட்டில் இருந்து வெளியேறுவதற்கான பாதையை அமைத்து உதவுமாறும், அரச அதிகாரியை வெளியே வர முடியாமல் தடுத்தவர்களை நீதிமன்றுக்கு அழைத்து வருமாறும் பொலீஸாருக்கு உத்தர விட்டார்.

அதனை அடுத்து குறிக்கப்பட்ட நால்வரும் நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர். வழக்கு முடிவடையும் வரை காணி தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கை செய்து வழக்கை இம்மாதம் 27 ஆம் திகதிவரை நீதிவான் ஒத்தி வைத்தார்.

### திருத்தம்

14-04-98 அன்று வெளிவந்த உதயன் நாளிதழ் 3 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியிருந்த அதிரீரன் மின்சார தொழில்நுட்ப நிலையம் விளம்பரத்தில் வாகன மின்னியலாளர், கலட்டி வீதி, கோண்டாவில் மேற்கு என்பதே சரியானது ஆகும்.

கோண்டாவில் தெற்கு என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம். (ஆ-ர்)

## மரண அறிவித்தல்கள்

திருமதி
### யோகம்மா சின்னத்தம்பி

யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா சின்னத்தம்பி அவர்கள் 12 - 4 - 98 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், சிவானந்தம், அருளானந்தம் (லேக் ஹவுஸ் கொழும்பு), லலிதா (தொழில் நீதிமன்றம், கொழும்பு), சறோஜா (பிரான்ஸ்), சந்திரா (பிரான்ஸ்), மோகனதாஸ், விவேகானந்தா (பாபு - ஆசிரியர், நல்லூர் சாதனா பாடசாலை), றணித்தா (இந்திய தூதரகம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், அருமைராணி, சந்தானகோபால் (பிரான்ஸ்), ஸ்ரீ பாலச்சந்திரன் (பிரான்ஸ்), லிங்கேஸ்வரி, றாஜேந்திரா (இந்திய தூதரகம்) ஆகியோரின் அருமை மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு சனிக்கிழமை (18 - 4 - 98) கனத்தை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
சி. விவேகானந்தா
(மகன்)
70/6, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (54949)

செல்வன்
### கணேஸ்வரசர்மா பகீரதன்

சுன்னாகத்தைச் சேர்ந்த கணேஸ்வரசர்மா (வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்)- மலர்மங்கை தம்பதிகளின் அன்பு மகன் பகீரதன் 15-04-98 புதன் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-4-98) வியாழக்கிழமை இலக்கம் 174, சிறி கதிரேசன் வீதி, கொழும்பு - 13 இல் நடைபெறும்.

தகவல்:
தி. குமாரசதாசிவம்,
தி. கிருபாகரன்
(சிறியதகப்பன்)

224/3, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம். (54948)

## பிரதம பொறியியலாளர், நிர்மாணத்திணைக்களம்,
## யாழ்ப்பாணம்.
# கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணப் பிரதம பொறியியலாளரினால் 1998 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 5 ஆம் திகதி முற்பகல் 10.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது காரியாலயத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

கட்டட நிர்மாண வேலைகளில் அனுபவமுள்ள ஒப்பந்தக்காரர்கள் மாத்திரம் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கிய பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

*கேள்வி வைப்புப் பணம்*

தகுதியுடையவர்கள் உரிய கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் நிர்மாணத் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப்பெற்று கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம். | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம். |
|---|---|---|
| 1. 24 படுக்கை அறைகளைக்கொண்ட விடுதி நிர்மாணித்தல் அச்சுவேலி வைத்தியசாலை கட்டம் 11 | 10,000/- | 500/- |
| 2. 14 படுக்கை அறைகளைக்கொண்ட வாட் நிர்மாணித்தல் கட்டம் 11 சங்கானை வைத்தியசாலை. | 8,700/- | 500/- |
| 3. கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நிர்மாணித்தல் கட்டம் 11 | 6,500/- | 250/- |

கேள்விப் பத்திரங்களை 1998 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 30 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்க முடியும்.

எந்திரி. ந. சுந்தரமூர்த்தி
பிரதம பொறியியலாளர்,
நிர்மாணத்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
நிர்மாணத்திணைக்களம்,
[illegible]
யாழ்ப்பாணம். (சி/3462)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற பட்டதாரிகள் கிழக்கில் போராட்டம்!

அம்பாறை, ஏப். 16

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு போட்டிப் பரீட்சை இன்றி நேர்முகப் பரீட்சை மூலம் ஆசிரிய நியமனம் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை உட்பட ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

தமது கோரிக்கைகள் தொடர்பாக திருகோணமலையிலுள்ள வடக்கு — கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் முன்பாக எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் இவர்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கவுள்ளனர்.

கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் இந்தப் போராட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இந்தப் போராட்டத்தில் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள வேலையற்ற பட்டதாரிகள் கலந்து கொள்ளவிருப்பதுடன், அம்பாறையிலிருந்து மட்டும் 20 சிங்கள வேலையற்ற பட்டதாரிகள் கலந்து கொள்ளவிருப்பதாக மேற்படி ஒன்றியத்தின் தலைவர் ஏ. ஆதம்பாவா தெரிவித்தார்.

போட்டிப் பரீட்சையின்றி நேர்முகப் பரீட்சை மூலம் ஆசிரிய நியமனம் வழங்குதல், வடக்கு கிழக்கிலுள்ள 1,350 வேலையற்ற பட்டதாரிகளுக்கு இந்த நியமனத்தில் முன்னுரிமை வழங்கல், பட்டதாரிகள் சம்பள அளவுத் திட்டத்தின் அடிப்படையில் நியமனம் வழங்கல், பல்கலைக்கழக பட்டம் பெற்ற ஆண்டில் அடிப்படையில் நியமனம் வழங்கல், ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு முன்னர் நியமனம் வழங்கப்படுதல் ஆகிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை மேற்படி கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் முன்வைத்துள்ளது. (இ-14)

## நிறைவு விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஏப். 16

தூண்டி இதழின் ஓராண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு வைபவமும் இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்தநிகழ்வில் கவிஞர் இ. முருகையன் பிரதம விருந்தினராகவும், யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம், பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் சிவ. மகாலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ள உள்ளனர்.

தி. செல்வமனோகரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வெளியீட்டுரையை கவிஞர் இ. முருகையன் நிகழ்த்துவார். பரிசில் வழங்கும் வைபவத்தில் சௌ. சசிக்குமாரசர்மா பரிசில்களை வழங்குவார்.

கவியரங்கு, பட்டிமண்டபம், கவிதைப் பட்டிமண்டபம் ஆகிய கலை நிகழ்வுகளும் இங்கு நடைபெற உள்ளன. (இ-9)

## வட அயர்லாந்து ஒப்பந்தம் சந்திரிகா வரவேற்பு

கொழும்பு, ஏப். 16

'வட அயர்லாந்து ஒப்பந்தம் ஜனநாயக சக்திகளுக்குக் கிடைத்த வெற்றி'

மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

பிரிவினை அரசியலை விட நல்லிணக்கம் மேலானதுஎன்பதையும்—

வன்செயல் பயங்கரவாதம் என்பவற்றை விட மிதவாதம் உயர்வானது என்பதையும்— இது எடுத்துக்காட்டுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயருக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில் ஜனாதிபதி இந்தக் கருத்தை வெளியிட்டார்.

வரலாற்று ரீதியான இந்த ஒப்பந்தம் 3 தசாப்தங்களுக்கு மேலாக நிலவிய இரத்தக் களரியுடனான சண்டையையும், வன் செயலையும் முடிவுக்குக் கொண்டு வந்து வட அயர்லாந்து மக்களுக்கு ஒரு புது வாழ்க்கையைத் தந்துள்ளது.

சமாதானமும், உடன்படிக்கையும் ஏற்படுமென்ற புதிய நம்பிக்கையும் தோன்றியுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-8)

## வண பிதா வெபர் காலமானார்

மட்டக்களப்பு, ஏப். 16

மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுத்துறை வளர்ச்சியில் முன்னணி வகித்தவண பிதா வெபர் நேற்று முன்தினம் மாலை தனியார்வைத்தியசாலை ஒன்றில் தனது 84 ஆவது வயதில் காலமானார்.

20— 02— 1914 ஆம் ஆண்டு அமெரிக்காவின் நியூ ஒலியன்ஸ் மாநிலத்தில் பிறந்த வண. பிதா வெபர் 1931 இல் யேசு சபையில் சேர்ந்து சமயப் பணியில் தம்மை அர்ப்பணித்தார்.

1940 இல் துறவியாகப் பட்டம் பெற்ற இவர் 1947 ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்று இலங்கை வந்தார்.

சுமார் 54 வருட காலமாக மட்டக்களப்பில் வசித்து வந்த வண. பிதா வெபர் மாவட்ட விளையாட்டுத் துறையின் '' தந்தை '' என மதிக்கப்பட்டு வந்தார்.

அவரின் பூதவுடல் புனித மிக்கேல் கல்லூரி தேவாலயத்தில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

நாளை பிற்பகல் 3. 30க்கு புனித மிக்கேல் கல்லூரி முன்றலில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். (இ-21)

## இளவாலை ச. ச. நிலைய திறப்பு விழா

இளவாலை, ஏப். 16

இளவாலை புனித யூதாதேயு சனசமூக நிலையம் கடந்த ஞாயிறன்று காலை 10 மணிக்கு நிலையத் தலைவர் அ. சேவியர் தலைமையில் இளவாலைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமரக்கோனினால் திறந்து வைக்கப்பட்டது.

பங்குத் தந்தை அருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் மங்கள விளக்கேற்றினார். ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது. ஈழமக்கள் ஜனநாயக் கட்சி மானிப்பாய் — வட்டுக்கோட்டைப் பிரதேச சபை உறுப்பினர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர் (ஐ-ரீ)

## அரிசி ஆலை உரிமையாளர் காயம்

மட்டக்களப்பு, ஏப். 16

பொலீஸ் காவல் நிலையத்திலிருந்து தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுக்காரணமாக அரிசி ஆலை உரிமையாளரொருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு பாலமீன் மடுவில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் குடும்ப உறுப்பினர்களுடன் கோயிலுக்குச் சென்று திரும்பும்போது இச்சம்பவம் இடம்பெற்றது.

நடனபாதம் ஜெகதீசன் (34 வயது) என்ற இவர் தற்போது மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-21)

## பொலீஸ்…

(முதலாம் பக்கத் தொடர்)

கைத் தலைமைச் செயலகம் நேற்றுத் தெரிவித்தது.

அதேசமயம் ரி 56 – 2, ரிவோல்வர் – 1, வாக்கிடோக்கி – 1 என்பன இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன என்றும்-

இச்சம்பவத்தையடுத்து உதவிக்கு விரைந்த பச்சைநூர் பொலீஸ் காவல் நிலைய பொலீஸாரை வழிமறித்து மேற்கொள்ளப்பட்ட மற்றொரு தாக்குதலில் சப் இன்ஸ்பெக்டர்கள் உட்பட 4 பொலீஸார் காயமடைந்தனர் என்றும் –மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7-21)

## பயணிகள்…

(முதலாம் பக்கத் தொடர்)

ரி. ஜி. திலகரத்தினா தெரிவித்தார்.

இன்று அமுலுக்கு வரும் புதிய நடைமுறைப்படி, கடந்த ஜனவரி முதல் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களும் அந்த அந்தப் பிரதேச பிரிகேட்டுகளுக்கு அனுப்பப்படும் என்றும் —

97 ஆம் ஆண்டு விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் ரத்துச் செய்யப்படுகின்றன என்றும்— அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-8)

## கிளிநொச்சி..

(முதலாம் பக்கத் தொடர்)

இத்தாக்குதலில் காயமடைந்த இரு படையினர் ஆனையிறவு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-8)

## இரத்தம்…

(முதலாம் பக்கத் தொடர்)

வங்கி அதிகாரி [illegible] திருமதி திருமகள் சிவசங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-8)


## தவறிவிட்டது

மாம்பழம் சந்திக்கும், தபாற்கட்டைச் சந்திக்கும் இடையில் மணிக்கூடு வடிவத்தில் T.A. எழுத்து பொறிக்கப்பட்ட சிறுபிள்ளையின்பவுண் கைச்செயின் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

பொ. கனகரட்ணம்
இல. 441, கண்டி றோட், (அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்துக்கு முன்பாக) அரியாலை.
(சி/3466)

## சன்மானம் வழங்கப்படும்

எனது தேசிய அடையாள அட்டையும் (இலக்கம் 783623315V) விசேட அடையாள அட்டையும் 14-04-98 செவ்வாய்க்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

நிரூபன் ஹென்றி,
இல. 7/3, மத்தியகிழக்கு வீதி,
றெக்கிளமேசன், யாழ்ப்பாணம். (54951)

நல்லூர் லயன்ஸ் கழகத்தின்
நலிந்தோர் சேவைத் திட்ட நிதிக்காக
யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட
மாணவர் ஒன்றியம்
மேடையேற்றும்

## விழிச்சுடர்

என்னும் சிறந்த மேடை நாடகம்

இடம்: சுண்டிக்குழி மகளிர் கல்லூரி மண்டபம்
காலம்; 18 - 04 - 1998 (சனிக்கிழமை)
நேரம்: காலை 10.30 மணி மாணவர்களுக்கு.
மாலை 3.30மணி நலன்விரும்பிகளுக்கு
நுழைவுச் சீட்டு: மண்டப வாயிலிலும் பெற்றுக் கொள்ளலாம்.
100/-, 50/-, 20/-
நாடகக்கரு: அழகியர் வேடத்தில் அரக்கர் இருவர் செல்வம் கொழிக்கும் நாடொன்றினுள் புகுந்ததால் ஏற்பட்ட அனர்த்தங்களைத் தத்ரூபமாகச் சித்திரிக்கும் இந்த நாடகத்தைக் காணத் தவறாதீர்கள்.

விளம்பர அன்பளிப்பு:

அஜந்தா
போட்டோ & வீடியோ
நல்லூர்.
அன்று ஓவியத்தின் புகலிடம் அஜந்தா!
இன்று படப்பிடிப்பின் கலைவடிவம் அஜந்தா!!
(சி/3463)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

ஏழாலை மத்தி அண்ணமகேஸ்வரர் ஆலயத்தில் சித்திரை வருடப் பிறப்பன்று இடம்பெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசுக்குரிய இலக்கம் 1215
2 ஆம் பரிசுக்குரிய இலக்கம் 2494
3 ஆம் பரிசுக்குரிய இலக்கம் 5421

ஆறுதல் பரிசுகள்
5436 563 662
1751 4543

தலைவர். - செயலாளர்.
(54953)

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ–து)
சுன்னாகம்

## மகளிர்களுக்கான அடிப்படை மனையியற் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

மேற்படி பயிற்சி நெறிக்கு சங்க எல்லைப்பரப்பில் வசிக்கும் மகளிர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சி பெற விரும்புவோர் 30-04-98 க்கு முன்னர் விண்ணப்பங்களை பொது முகாமையாளர், பல நோ. கூ. சங்கம், சுன்னாகம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
11-04-98 (சி/3465)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில், 16 -04-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org